
பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 02 சனிக்கிழமை 14.02.2026 | அதிர்வு 197

## முடிந்தால் தேர்தலை நடத்துங்கள்



### அரசுக்கு 'மொட்டு' சவால்

தற்போதைய அரசு மாகாண சபைத் தேர்தலைத் தட்டிக்கழிக்காமல் உடனடியாக நடத்த வேண்டும் என

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### பண்டாரவளையில் பயங்கரம்

## கல்குவாரியில் மண்சரிவு! இரு தொழிலாளர்கள் பலி!!



பதுளை மாவட்டம், பண்டாரவளை பிரதேசத்திலுள்ள கல்குவாரி ஒன்றில் இன்று இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி இரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விவரங்கள் வருமாறு:-

**விபத்து நிகழ்ந்த விதம்**

பண்டாரவளை – பூனாகலை வீதியில் 16 – 17 ஆம் கிலோமீற்றர் கம்பங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள 'லியங்கஹ வல, மாபிடிய' கல்குவாரியிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

02

# தேர்தலைக் கண்டு நாம் அஞ்சவில்லை!

### தோற்றவர்களின் தேர்தல் கோஷங்களுக்குப் பணியமாட்டோம்; மாகாண சபைத் தேர்தல் குறித்து அமைச்சர் நளிந்த விளக்கம்

கொழும்பு, பெப். 14

**மாகாண சபைத் தேர்தலைக் கண்டு தாம் ஒரு போதும் அஞ்சப்போவதில்லை எனவும், உரிய முறைப்படி அவை நடத்தப்படும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

02



### நெடுந்தீவில் மனிதாபிமானமற்ற கொடூரம்

## புறாக்கள் உயிரோடு தீயிட்டு எரிப்பு!

### பொலிஸாரைக் கண்டதும் உரிமையாளர்களின் வெறிச்செயல்





**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கடத்தி வரப்பட்டு, நெடுந்தீவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட புறாக்கள், பொலிஸாரைக் கண்டதும் உரிமையாளர்களால் உயிரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்ட மனிதாபிமானமற்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்த விரிவான தகவல்கள் வருமாறு:-

02

# கிளிநொச்சியில் சிறிதரன் ஆதரவுக் கூட்டம்






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நாடாளுமன்ற குழுத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கிளிநொச்சியில் கண்டன கூட்டம் ஒன்று இன்று நடைபெற்றது.

கிளிநொச்சி பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் என்ற பெயரில் இந்த "அநீதிக்கான ஒன்றுகூடல்" இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்தகண்டனக்கூட்டத்தில்கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் பணிப்புரையை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஏற்க மறுத்தமையால், அவரை நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கட்சி தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

கட்சியின் எந்த உயர் சபை அவருக்குப் பதவியை வழங்கியதோ, அந்தச் சபையின் பணிப்புரையை அவர் நிராகரித்தமையால், அப்பதவியை அவரிடமிருந்து மீளப் பெறத் தீர்மானிக்கப்பட்டதாக என அவர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கல்குவாரியில்...

இன்று காலை குறித்த குவாரியில் பாறைகளைத் துளையிடும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக மேலதிக மண் மற்றும் கற்கள் சரிந்து விழுந்துள்ளன.

**சடலங்களை மீட்கும் பணி**

இந்தச் சரிவில் சிக்கிய இரண்டு தொழிலாளர்களும் மண் மற்றும் பெரும் பாறைகளுக்கு அடியில் புதைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அனர்த்தம் குறித்துத் தகவல் கிடைத்ததும், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

இராணுவத்தினரின் விசேட உதவியுடன், கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி மண் மற்றும் கற்களுக்கு அடியில் புதைந்துள்ள உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### புறாக்கள்...

**நெடுந்தீவில் பதுக்கல்**

சுமார் இரண்டு தினங்களுக்கு முன்னர், இந்தியாவிலிருந்து 144 புறாக்கள் கடல் மார்க்கமாக நெடுந்தீவுக்குக் கடத்தி வரப்பட்டுள்ளன. அங்கிருந்து பகுதி பகுதியாக யாழ்ப்பாணத்திற்குப் புறாக்களைக் கடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

**மூவர் கைது**

நேற்று முதற்கட்டமாக 44 புறாக்களைக் குறிகட்டுவான் பகுதிக்கு எடுத்துச் சென்றபோது, கடற்படையினர் அவற்றை வழிமறித்து மூவரைக் கைது செய்தனர். பின்னர், சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், எஞ்சிய நூற்றுக்கும் மேற்பட்ட புறாக்கள் நெடுந்தீவில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை உறுதியானது.

**தீயிட்டுக் கொளுத்திய உரிமையாளர்கள்**

நெடுந்தீவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த புறாக்களை மீட்பதற்காகப் பொலிஸார் வருவதை அறிந்த வீட்டின் உரிமையாளர்கள், சட்ட நடவடிக்கைக்கும் ஆதாரங்களுக்கும் அஞ்சி அதிர்ச்சிகரமான முடிவை எடுத்தனர். புறாக்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த கூண்டுக்கு மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்துள்ளனர்.

**உயிர் தப்பிய புறாக்கள்**

சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்தபோது, சுமார் 50 இற்கும் மேற்பட்ட புறாக்கள் தீயில் கருகி உயிரிழந்தும், காயங்களுடன் துடிதுடித்துக் கொண்டும் இருந்துள்ளன. எஞ்சிய புறாக்களையாவது காப்பாற்றும் நோக்கில் பொலிஸார் உடனடியாகக் கூண்டைத் திறந்து விட்டுள்ளனர். இதன் மூலம் ஏனைய புறாக்கள் பறந்து சென்று உயிர் தப்பின.

இந்தக் கொடூரச் செயல் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, தப்பியோடிய வீட்டின் உரிமையாளர்களைத் தேடி வருகின்றனர்.

### முடிந்தால்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**மக்கள் செல்வாக்கை நிரூபிக்க வாய்ப்பு**

"தற்போதைய அரசு உண்மையிலேயே மக்கள் செல்வாக்குடன் இருப்பதாக நம்பினால், காலங்கடத்தாமல் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முன்வர வேண்டும். தேர்தல்களை ஒத்திவைப்பது ஜனநாயகத்திற்கு அழகல்ல.

**அரசு மீதான அதிருப்தி**

அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மக்கள் பல எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தனர். ஆனால், தற்போது மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது. அந்த அதிருப்தியை அளவிடுவதற்கு மாகாண சபைத் தேர்தல் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமையும். மக்கள் ஆணை யாருக்கு இருக்கின்றது என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தும்." - என்றார்.

### தேர்தலைக் கண்டு...

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன விடுத்த சவாலுக்கு பதிலடி கொடுத்து கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"அரசின் மீதான மக்கள் செல்வாக்கை அளவிடுவதற்கு மாகாண சபைத் தேர்தல் ஒன்றும் அவசியமில்லை. கடந்த பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் மக்கள் வழங்கிய தெளிவான ஆணையின் அடிப்படையிலேயே இந்த அரசு இயங்கி வருகின்றது. லக்ஷ்மன் யாப்பா போன்றோர் இழந்த அரசியல் செல்வாக்கை மீட்டெடுக்கவே இத்தகைய சவால்களை விடுகின்றனர்.

மாகாண சபைத் தேர்தல் முறைமைகளில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து, முறையான ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்தவே நாம் திட்டமிட்டுள்ளோம். இதில் எவ்வித அரசியல் காலதாமதமும் இல்லை.

கடந்த கால ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து அரசு எடுத்து வரும் கடும் நடவடிக்கைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே எதிர்க்கட்சியினர் தற்போது தேர்தல் கோஷத்தை எழுப்புகின்றனர்.

எமது முதன்மை நோக்கம் நாட்டைப் பொருளாதார ரீதியாகவும், ஊழலற்ற நிர்வாக ரீதியாகவும் கட்டியெழுப்புவதாகும். அதற்குத் தடையாக இருக்கும் எவ்வித அழுத்தங்களுக்கும் அரசு பணியாது." - என்றார்.

# வவுனியாவில் மோ. சைக்கிள் திருட்டு; கணவன்,மனைவி உட்பட மூவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கணவன் மனைவி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியாப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன் வவுனியா, சதொச வீதியில் மோட்டர் சைககிள் ஒன்று திருடப்பட்டிருந்தது. திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் உரிமையாளர் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டுக்கமைய, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.எஸ்.வீரத்தினவின் வழிகாட்டலில், வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி இலங்கசிங்க தலைமையில் பொலிஸ் சார்ஜண்டுகளான திஸாநாயக்க (37348), ரேவத (40878) பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி (60945), நவகீதன் (60945) உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது,மடு,இரணைஇலுப்பைக் குளம் பகுதியில் வசிக்கும் 23 வயதுடைய நபர் ஒருவரும்,அவருடைய 25 வயதுடைய மனைவி மற்றும் 31 வயதுடைய மனைவியின் மைத்துனர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.



அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவினர் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளாதாக தெரிவித்துள்ளனர்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தீர்வின்றேல் மீட்சியில்லை

தமது மூன்று தசாப்த கால அரசியல் வாழ்வில் தேசிய இனப் பிரச்சினைக்கானதீர்வுதொடர்பான விடயங்களில் பல கட்டங்களில் - பல மட்டங்களில் - பங்காற்றியவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். சட்ட மேதை என்ற முறையில் அவரது அறிவு இந்த விடயத்தில் விசாலமானதாயினும், அவ்வப்போது தாம் சேர்ந்து இருக்கும் அரசுகளின் கருத்தியலைப் பிரதிபலிப்பதற்காக அவர் இந்த விவகாரத்தில் குதர்க்கமாக பேசத் தவறியதும் இல்லை. இப்போது அவர் எதிர் அணியில் இருப்பதால் சற்று நியாயமாக - நீதியாக - பேசுகின்றார் எனத் தோன்றுகின்றது.

தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி விட்டு அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்ற ஆரம்பக்கால நிலைப்பாடு பிற்பட்ட காலத்தில் தவறாக அமைந்தது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாடு என்ற ரீதியில் ஒரு போதும் முன்னேற்றமடைய முடியாதென முன்னாள் நீதி மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இப்போது தெரிவிக்கின்றார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் வன்டெக்ஸ்ட் இனிஷியேட்டிவின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அவரது ‘இலங்கையில் சமாதானப்பேச்சுவார்த்தை முன்னெடுப்பு: ஓர் உள்ளகப் பார்வை’ எனும் நூல் பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“புதிய அரசமைப்பை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்றளவில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளைக் கூட முன்னெடுக்கவில்லை. குறைந்தபட்சம் ஒரு கருத்தாடல் கூட இடம்பெறவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை உள்ளது. அரசமைப்பு தொடர்பில் மக்களின் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் முற்போக்கான நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஆகவே புதிய யாப்புருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் சிறந்த முறையில் வெளிப்படையாக முன்னெடுக்கலாம்.

யுத்தம் முடிவடைந்தவுடன் அந்த மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதன் பின்னர் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் அது தவறென்று பிற்பட்ட காலத்தில் உணரப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நாடு என்று ரீதியில் முன்னேற்றமடைய முடியாது. இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் அரசமைப்பின் ஊடாக முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும்” - என்றார்.

இதைத்தான் தமிழர் தரப்பு நீண்ட காலமாக சுட்டிக்காட்டி வருகின்றது. நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான - நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய - தீர்வு ஒன்றைக் காணாத வரை நாடு முன்னேற முடியாது என்பதுதான் நிஜம். அதை உணராமல் தங்கள் அரசியல் நலனுக்கு ஏற்ப இந்த விடயத்தில் சுத்துமாத்து பண்ணிக்கொண்டு நிற்கின்றது தென்னிலங்கை.




# மொனராகலை சண்முகவுக்கு பிரதமர் ஹரிணி விஜயம்

( நடராஜா மலர்வேந்தன்)

நாட்டின் பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய நேற்றுக் காலை மொனராகலை சண்முக தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஆய்வு சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

ஊவா மாகாண ஆளுநர் கபில ஜெயசேகர, வர்த்தக, வணிகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம் பாட்டு துணை அமைச்சர் ஆர்.எம். ஜெய வர்தன, மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற் றும் மாகாண கல்வி செயலாளர் நிஹால் குணரத்ன மற்றும் கல்வித் துறை யைச் சேர்ந்த அதிகாரிகள் குழு இந்த நிகழ்வில் கலந்து கொண் டது.













# இஸ்லாமாபாதின் துயரம் கழிவுநீர் பிரச்சினை; கல்முனை மாநகர சபை அவசர நடவடிக்கை!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை, இஸ்லாமாபாத் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் நீண்ட காலமாக நிலவி வரும் கழிவுநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக கல்முனை மாநகர சபை விஷேட வேலைத் திட்டம் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுத்தது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியின் பணிப்புரைக்கு அமைவாக இதற்கான அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்காக அமைக்கப்பட்ட இஸ்லாமாபாத் வீட்டுத் தொகுதிக்கான கழிவு நீரகற்றல் முறைமையில் உள்ள தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாக அங்குள்ள வீடுகளில் இருந்து கழிவு நீர் சேகரிப்புத் தாங்கிக்கு வரும் கழிவு நீர் சீராக அகற்றப்படுவதில்லை. இதனால் அந்தப் பகுதி முழுவதும் கழிவு நீர் பரவுவதால் பாரிய துர்நாற்றமும் சுற்றுச்சூழல் பாதிப்பும் சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

இதனால் குறித்த வீட்டுத் தொகுதியில் வாழும் மக்கள் மாத்திரமன்றிச் அயசில் உள்ள மக்களும் பெரும் அசௌகரியங்களையும் டெங்கு உள்ளிட்ட நோய் அபாயங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். இஸ்லாமாபாத் எனும் பாரம்பரிய ஊர் ஒன்றின் துயரமாக இந்தப் பிரச்சினை கருதப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு வழங்க கல்முனை மாநகர சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன்போது பிரதான தாங்கியில் இருந்து சுத்திகரிப்புக்குச் செல்லும் கழிவு நீர்க் குழாய் பாதையில் அமைந்துள்ள பல துணைத் தாங்கிகள் திறக்கப்பட்டு, அவற்றில் நிரம்பியிருந்த பிளாஸ்டிக் போத்தல்கள், பம்பஸ்கள் மற்றும் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டும் திரவங்கள் வெளியேற்றப்பட்டும் சீர் செய்யப்பட்டது.

அடிக்கடி இந்தப் பிரச்சினை தலைதூக்கும் சந்தர்ப்பங்களில் இதற்கு முன்னரும் பல தடவைகள் கல்முனை மாநகர சபை இது தொடர்பில் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முறையான திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். இது தொடர்மாடி வீட்டுத் தொகுதி என்பதால் அதன் பராமரிப்புக்கான முதலீட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மூலமே அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

கல்முனை, இஸ்லாமாபாத் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் கடந்த பல வருடங்களாக இந்தக் குழு செயற்பாட்டில் இல்லை எனத் தெரிய வருகிறது. இது விடயத்தில் சம்மந்தப்பட்ட தரப்பினர் கூடிய கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது.







# அம்பாறையில் பெரும்போக நெல் அறுவடை!

(ஜலீல் ஜீ )

அம்பாறை மாவட்டத்தில் பெரும் போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு, தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றது. நீண்ட நாள்களின் பின், இந்த முறை விவசாயிகளுக்கு எதிர்பார்த் தளவு விளைச்சல் கிடைத்து வருகிறது என்று மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடங்களில் தொடர் நஷ் டத்தை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு இம்முறை கணிசமானளவு விளைச்சல் கிடைத்துள்ளது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

சாதாரணமாக, ஏக்கரொன்றுக்கு 120 முதல் 160 புசல் வரை விளைச்சல் கிடைத்துள்ளது என்று விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

வெள்ளப் பாதிப்புப் பிரதேச காணிக ளில் விளைச்சல் குறைவடைந்துள்ளது.

அரசு உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு செய்யும் வேலைத் திட் டத்தை நெற்சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அக்கரைப்பற்று, சாகாமம், தீக வாபி, நாவி தன்வெளி, ஹிங்னாலுகே, பாணமை, பொத்துவில், மல்வத்தை போன்ற கொள்வனவு நிலையங்கள் இதற்காகத் திறக்கப்பட்டுள்ளன.

நாடுவெள்ளை மற்றும் சிவப்பரிசி நெல் ஒரு கிலோ 120 ரூபா, சம்பா ஒரு கிலோ 130 ரூபா, கீரி சம்பா ஒரு கிலோ 140 ரூபா என்ற நிர்ணய விலையில் கொள்வனவு இடம்பெற்று வருகின் றது.

நாடு வெள்ளை மற்றும் சிவப்பரிசி இனங்களே அதிகம் செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இதுதவிர, அரிசி ஆலை உரிமை யாளர்கள், தனியார் வியாபாரிகள் ஆகி யோர் விவசாயிகளிடம் இருந்து நெல்லை உடனுக்குடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

66 கிலோ நிறையுடைய வெள்ளை மற்றும் சிவப்பரிசி நெல் மூடையொன்று 5700 முதல் 6000 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்ற து.

வெளி மாவட்டங்களில் இருந்து தினசரி அம்பாறை மாவட்டத்துக்கு வரும் வியாபாரிகளும் நெல் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். இம்முறை பெரும்போக அறுவடை ஆரம்பமாகும் போது 7,800 ரூபாவுக்கு விற்கப்பட்ட நெல் விலையே தற்போது குறைவடைந்துள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை, வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெரும்போக விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்கியுள்ளது. முற்றாகச் சேதமடைந்த நெற்காணி ஒரு ஏக்கருக்கு 60 ஆயிரம் ரூபா என்ற கணக்கில் விவசாயிகளின் வங்கிக் கணக்குக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்றும் அதேபோன்று பகுதியளவில் சேதத்தை எதிர்கொண்டவர்களும் நஷ் டஈட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் கொல்களம்!

## இடத்தை வேறு தேவைக்கு வழங்க நடவடிக்கை

(அபு அலா)

அட்டாளைச்சேனை - தைக்காநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள கால்நடை கள் கொல்களம் தற்போது யாருமே கவனிப்பாரற்ற நிலையிலும், அந்தக் கட்டடத்தின் மேற்கூரை மற்றும் கதவுகள் முற்றுமுழுதாக சேதமடைந்ததும் காணப் படுகின்றன. அந்தக் கட்டடம் கடல் பிர தேசத்தை அண்டியுள்ளதால் அதில் பொருத்தியுள்ள இரும்புக் கம்பிகளும் துருப்பிடித்துச் சேதமடைந்தது காணப் படுகின்றன.

இயற்கை சூழல் நிறைந்த இடத்தில் அமையப்பெற்ற இந்தக் கட்டடத்தில் சிறுவர் பூங்கா அல்லது வாசிகசாலை அல்லது கூட்ட மண்டபம் போன்ற தேவைகளுக்காக அதனை மாற்றிய மைத்து பொது மக்கள் பாவனைக்கு கையளிக்குமாறு அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸ் மற்றும் குறித்த வட்டார பிர தேச சபை உறுப்பினர் ஏ.எல்.றியாஸிடம் அப்பிரதேச மக்கள் கோரிக்கை முன் வைத்தனர்.

ஹஅதற்கமைவாக, இந்தக் கட்ட டத்தை நேரடியாகச் சென்று அவதானித்த பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப் பினர், பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாக அதனை மாற்றியமைக்க தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ் சபையின் அனுமதியைப் பெற்று அதுதொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று தெரிவித்தார்.







# டித்வா நிவாரண நிதி 10 லட்சத்தை மீள ஒப்படைத்த இரு முதியவர்கள்

## மகவ பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்ற சம்பவம்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

அண்மையில் ஏற்பட்ட டித்வா புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தலா 5 லட்சம் ரூபா நஷ்ட ஈட்டுத் தொகையை, தங்களைவிட அதிக பாதிப்புக்குள்ளான மக்களுக்கு வழங்குமாறு கூறி இரு முதியவர்கள் அரசிடம் மீள ஒப்படைத்துள்ள சம்பவம் மகவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மகவ பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாகடுவாவ பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய எச்.எம்.ஏ. ரன்பண்டா மற்றும் மானிங்கமுவ பகுதியைச் சேர்ந்த 82 வயதுடைய ஆர்.ஐ.பி. டிங்கிரி அம்மா ஆகியோரே இந்த உன்னதமான செயலைச் செய்துள்ளனர்.

டித்வா புயல் காரணமாக இவர்களது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக மதிப்பிடப்பட்ட தலா 5 லட்சம் ரூபா நஷ்ட ஈட்டுத் தொகையைத் தங்களுக்கு வேண்டாம் எனவும், அதனை தாங்களை விடவும் அதிக பாதிப்புக்குள்ளான அனாதரவான மக்களுக்குப் பயன்படுத்துமாறும் கோரி இவர்கள் இருவரும் பிரதேச செயலாளருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

தங்களது இந்தத் தீர்மானத்துக்கான காரணத்தை விளக்கிய ரன்பண்டா, மற்றும் தமக்கு ஏற்பட்ட சேதத்தை விடவும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்தில் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

“என்னை விட வசதியற்றவர்கள் பலர் உள்ளனர். இந்த அனர்த்தத்தால் எனக்குப் பாதிப்பு ஏற்பட்டது உண்மைதான். ஆனால், என்னால் இன்னும் மீண்டும் எழுந்து நிற்கும் சக்தி இருக்கிறது” என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், “இந்த அனர்த்தத்தால் முழுமையாக வாழ்வாதாரத்தையும் இழந்து, உணவுக்கும் வழியின்றித் தவிக்கும் மக்களை நான் கண்டேன். அரச பணம் என்பது மக்களின் பணம். எனவே, இந்தப் பணம் என்னை விட மிகவும் பாதிக்கப்பட்ட ஒருவருக்குச் சென்றால் நாம் மகிழ்ச்சியடைவோம்” என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாவைக் கொண்டு சேதமடைந்த சில பகுதிகளைத் தாம் ஏற்கனவே சரிசெய்து கொண்டனர் என்றும் அவர்கள் மேலும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

# ஹட்டனில் நகைகளைத் திருடிய சந்தேக நபர் பிணையில் விடுவிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் பிரதேசத்தில் 9 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை திருடிய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் நகரில் உள்ள வீடொன்றினுள் புகுந்து 9 லட்சத்து 62 அயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய 36 வயதுடைய நபர் ஒருவரை ஹட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் யூனிஃபீல்ட் தோட்டம், கே.ஜி.கே பிரிவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுகததாசவுக்கு கிடைத்த விசேட தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.



சந்தேக நபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலை படுத்தப்பட்ட போது, தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இந்த நிலையில் சந்தேக நபரை ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.




# புதிய பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராகக் கொழும்பில் நேற்று போராட்டம்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கையில் தற்போது பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கும் நிலையில் தற்கால அரசு பயங்கரவாத செயற்பாடுகளில் இருந்து பாதுகாப்பதற்காக புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒன்றைக் கொண்டு வருகின்றமை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இதனை அரசுக்கு எடுத்துக்காட்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நீதி அமைச்சுக்கு முன்னால் இடம்பெற்று வருகின்றன.



அதன் வரிசையில் நேற்று வெள்ளிக் கிழமை மலையக மக்கள் பிரதிநிதிகள், மலையக சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய சிவில் அமைப்புகள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நிறுத்துவதாக கூறிய அரசு வேறு பெயரில் புதிய சட்டம் ஒன்றை கொண்டு வருவதை மக்கள் எதிர்க்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மலையக மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடும் சந்தர்ப்பங்களில் கூட இந்தப் புதிய பயங்கரவாத சட்டத்தின் ஊடாக அந்த மக்களைத் தடுக்க முடியும் என்ற கருத்துக்களையும் முன் வைத்தனர்.

அரசு உடனடியாக இந்த சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.






# சாய்ந்தமருதில் பசுமையான கடற்கரை பூங்கா திறப்பு

**(பாறுக் ஷிஹான்)**

அரசின் "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத் திட்டத்தின் கீழ் 100 பசுமையான கடற்கரை பூங்காக்களை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக சாய்ந்தமருது பகுதியில் பசுமையான கடற்கரை பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

ஒரு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கடற்கரைப் பூங்காவை அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கரையோரப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா திறந்து வைத்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டு மாநகர சபைக்கு உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்ட இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், கிழக்கு மாகாண கரையோ பாதுகாப்புத் திணைக்கள பொறியியாளர் எம்.துலஷிதாஸன், கல்முனை மாநகர ஆணையாளர் ரி.எம். றாபி மற்றும் கரையோரம் பேணல் திணைக்களத்தினுடைய உத்தியோகத்தர்கள், பிரஜா சக்தியினுடைய தவிசாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் உட்பட தேசிய மக்கள் சக்தியின் பிரதேச செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







நவரத்தினம் கர்ணி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# மட்டக்களப்பு கிராமங்களில் சிறப்புற்று விளங்குகின்றது கொம்பு முறி வழிபாடு...!

பாரம்பரியமும் பண்பாடும் நிறைந்த தமிழர்களின் பண்டைய கால வழிபாடுகளில் ஒன்றாக விளங்கும் கொம்பு முறி விளையாட்டானது “கொம்பு முறி” என்றும் “கொம்பு முறி வழிபாடு” என்றும் அழைக்கப்படுகின்றது.

கொம்பு முறி விளையாட்டானது கண்ணகி வழிபாட்டோடு தொடர்புபட்டதாகும். பாண்டிய மன்னன் நீதி தவறி கோவலனை கொலை செய்தான். தன் கணவனுக்காக நீதிக்கோரிய கற்புக்கரசி மதுரையை எரித்தும் கோபம் தணியாது வந்த கண்ணகியை குளிர்விப்பதற்காக இடையர் சேரியில் வாழ்ந்த இளைஞர்கள் காதல் கலந்த விளையாட்டாக கொம்பு முறி விளையாட்டை செய்து அவளை குளிர்வித்தனர். இதனைக் கண்டு சினம் தணிந்து மனம் மகிழ்ந்த கண்ணகி இடைச்சேரியரை வாழ்த்தி சென்றாள் என்றும் கூறப்படுகின்றது. இதனைப் பின்பற்றியே பழங்கால முதல் இன்று வரை கண்ணகி வழிபாட்டு முறையாக இடம்பெற்று வருகின்றதாக கூறப்படுகின்றது.

இந்த விளையாட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை, காரைதீவு, தேற்றாத்தீவு, மண்டூர், மகிழடித்தீவு, சித்தாண்டி வந்தாறுமூலை என பல இடங்களில் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது. இவ் விளையாட்டு குறிப்பாக படுவான்கரை பகுதியில் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் மிகவும் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

கொம்புமுறி விளையாட்டு இந்தப் பிரதேசத்தில் 1997 ஆம் ஆண்டு இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. அதன்பின் 14 வருடங்கள் கழித்து 2014 ஆம் ஆண்டு இவ் விளையாட்டு இடம்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து பத்து வருடங்கள் கழித்து 2025 ஆம் ஆண்டு 10 ஆவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் கொம்பு முறி விளையாட்டு மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

இக் கொம்பு முறி விளையாட்டு பொருட்களாக கொம்பு, பில்லி, அடை ,ஆப்பு, நெஞ்சடிப் பலகை, தாய்மரம், செவ்வாய்க்குற்றிவளையம், அரிப்பு, வடம் தாங்கி, வடம் என்பனவாகும்.

கொம்பு விளையாட்டில் பொருட்களை தேடி எடுத்தாலும் தயார்படுத்தலும், கொம்பு தூது பிடித்தல், கொம்புகளை வரிதல் கொம்புகளை பூட்டுதல், அடைக்கட்டுதலும் ஆப் படித்தலும், தாய்மரத்துக்கும் செவ்வாய்க்குற்றிக்கும் இடையில் இணைத்தல், அடை பிடித்தலும் வடம் இழுத்தலும், வெற்றி தோல்வி தீர்மானித்தல் என்பன இதன் போது இடம்பெறும் நிகழ்வுகளாகும்.

கொம்பு விளையாட்டின் போது ஊர்மக்கள் இரண்டு பிரிவாகப் பிரிந்து விளையாடுவார்கள். இதில் ஒரு பக்கம் கண்ணகிக்கும் மறுபக்கம் கோவலனுக்கும் என்று குறிப்பிடப்படுகின்றது. முறையே தென்சேரி, வடசேரி என அழைப்பர். மக்கள் பிரிந்து நின்று இரண்டு வேறு வளைந்த

தொடர்ச்சி▼



# மட்டக்களப்பு கிராமங்களில் சிறப்புற்று விளங்குகின்றது கொம்பு முறி வழிபாடு...!

தொடர்ச்சி▲

தடிகளை ஒன்றோடொன்று கொளுவி இழுத்து அந்தக் கொம்பை முறித்து விளையாடுவார்கள். இதன் போது பல கொம்பு முறி விளையாட்டுப் பாடல்களும் பாடப்படுகின்றது.

**உதாரணமாக**

"கோலப் பணிச் சோலை கொய்துடுத்துக் கொம்பு விளையாட்டுக்குப் போகையிலே
வேலப்பர் வந்து மடி பிடித்து
மெத்தவுஞ்சிக்கிக் கொண்டார் தோழி..." என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

இதில் வெற்றி பெற்றவர்கள் சிறாம்பி போட்டு வெற்றியை கொண்டாடுவார்கள். வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்களைப் பார்த்து வசைபாடி பாடல்களையும் பாடுவது வழக்கமாகவுள்ளது. உதாரணமாக

"ஆற்றோரம் சிறாம்பி கட்டி அங்கு நின்று படை பொருது
தோற்றுவாறான் தென்சேரியான் – அவனைத் துடைப்பங் கட்டாலே அடியுங்கடி..." என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

என இதில் ஒரு சேரியரை இன்னொரு சேரியார் பழித்தும் தம் சேரியை புகழ்ந்தும் வசைபாடல்களை பாடுவார்கள். இதில் எந்த சேரியர் வெற்றி பெற்றாலும், அதனை கண்ணகி அம்மனின் வெற்றியாகவே கருதி வழிபடுவார்கள்.

இவ் விளையாட்டு பருவகால வழிபாடாக புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் மட்டக்களப்பு மக்களால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த விளையாட்டானது மழை வேண்டியும், நோய் நொடியின்றியும், செல்வம் செழிப்புற்று விளங்கவும் கண்ணகிக்கு நேர்த்தி வைத்து விளையாடும் மரபாக கொம்பு முறி வழிபாடு இருந்து வருகின்றது.

கொம்பு முறி விளையாட்டை அல்லது வழிபாட்டை பெருவிழாவாகக் கொண்டாடுவதற்கு இதன்போது இடம் பெறும் ஏனைய நிகழ்வுகளான போர்த் தேங்காய் அடித்தல், கொம்பு நேர்தல், வாரம் பொறிதல், வசந்தன் ஆடல், ஏடகம் கட்டி ஊர் சுற்றுதல், கொம்புக்கு மந்திரிக் கிரியை செய்தல், கொம்பு தட்டுதல், வசை பாடல், குளிர்த்தி ஆடல் என்பன காரணமாக அமைகின்றன.

மட்டக்களப்பில் கொம்பு விளையாட்டு நடைபெற்ற இடங்கள் சிறப்பு பெயர் பெற்றுள்ளன. அந்த வகையில் களுதாவளையில் "கொம்புச்சந்தி" என்றும் மண்டூரில் "கொம்புவம்மியடி" என்றும் இடங்கள் பெயர் பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. இது கொம்பு முறி விளையாட்டின் தனித்துவத்தை நிலை நிறுத்தி நிற்கின்றது.

கொம்பு முறி விளையாட்டானது தமிழர்களின் பாரம்பரியமான வழிபாடாகவும் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் களமாகவும் அமைகின்றது. இது கண்ணகி அம்மன் மீது உள்ள இறை பக்தியையும் அதன் நம்பிக்கையும் உணர்த்தும் நிகழ்வாகவும் இக் கொம்பு முறி விளையாட்டு மட்டக்களப்பு கிராமங்களில் சிறப்புற்று விளங்குகின்றது.



## 45 லட்சம் ரூபா செலவில் அமையப்பெற்ற

# சிறுகைத்தொழில் நிலையம் ஒன்று முள்ளிப்பொத்தானையில் திறப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முள்ளிப்பொத்தானையில் சிறு கைத் தொழில் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்தார். சிறு கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இங்கு பெண்களுக்கான பை (Bag) உற்பத்தி, பாடசாலை மாணவர்களுக்கான பை தயாரிப்பு போன்றனவும் இடம் பெற்று வருகிறது.

இந்தச் சிறிய உற்பத்தி நிலையம் ஊடாக அந்தப் பகுதிப் பெண்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளிட்ட வருமானங்களை ஈட்டவும் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், இலங்கை வங்கி தம்பலகாமம் பிரதேச கிளை முகாமையாளர் நர்மதா, பிரஜா சக்தி குழு தலைவர் ஜபருள்ளா, சர்வமதத் தலைவர்கள், ஐக்கிய பெண்கள் அமைப்பின் தலைவி எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# சாமிமலை மின்னா பிரிவுக்குச் செல்லும் வீதியைத் திருத்தித் தருமாறு கோரிக்கை

(மஸ்கெலியா நிருபர்
செ.தி.பெருமாள்)

சாமிமலை ஓல்ட்டன் தோட்ட மின்னா பிரிவுக்குச் செல்லும் பிரதான சாலை அவல நிலையில் காணப்படுகிறது என்றும் இந்த அவல நிலை தொடர்பில் இந்த அரசு கவனம் செலுத்துமா என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட சாமிமலை ஓல்ட்டன் தோட்ட மின்னா பிரிவுக்குச் செல்லும் சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாதை பல தசாப்தங்களாக மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்காளர்கள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளிகள் இந்த பிரிவில் வாழ்ந்து வருகின்றனர்.

தமது அன்றாட தேவைகளுக்காகச் சாமிமலை மற்றும் மஸ்கெலியா நகருக்கும் பாடசாலை மற்றும் வைத்திய சாலைக்கும் குறித்த சாலையூடாகவே செல்ல வேண்டியுள்ளது.

கடுமையான நோய் காரணமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய நோயாளிகளைக் குறித்த நேரத்துக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில கர்ப்பிணித் தாய்மார்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் குழந்தை பிரசவித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த நிலையில் அவர்களில் சிலருக்கு உயிராபத்தும் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாதையைச் சீர் செய்து தருமாறு பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு மலையக மக்கள் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் இன்றுவரை தமக்கான உரிய தீர்வு கிடைக்கவில்லை என்று ஓல்ட்டன் தோட்ட மின்னா பிரிவில் உள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமக்கான உரிய தீர்வை தற்போதைய ஜனாதிபதி மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோர் பெற்று தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிழக்கு விவசாய அமைச்சின் திட்ட முன்னேற்ற மதிப்பாய்வு!

(அபு அலா)

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் துறைசார்ந்த மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டம் அமைச்சின் செயலாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் திருகோணமலை விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் பங்கேற்புடன் இடம்பெற்ற அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டத்தில் அமைச்சும், அமைச்சுடன் இணைந்த 6 நிறுவனங்களின் முன்னேற்ற நிலை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் காணி நிர்வாகத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மற்றும் மீன்பிடிப் பிரிவு போன்ற திணைக்களங்களின் கிழக்கு மாகாண பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் பங்கேற்று குறித்த விடயம் தொடர்பில் விளக்கங்களை வழங்கி வைத்தனர்.






# அன்பை கொண்டாடும் ஒரு தினம்...!

இளசுகளின் மனம் மறந்துவிடாது அலை பாயும் ஒரு தினம் என்றால் பெப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தினம்!

"காதலர் தினம்" மேற்கத்திய உலகில் கலாசாரத்தின் சிந்தனையால் உருவான தினம்!

இரவு பணிரெண்டு மணிக்கு காதலர்கள் ஒன்று கூடி முத்தமிடுவதும் பூச்செண்டுகளை பறிமாறுவதும் பரிசில்களை கொடுப்பதும் உல்லாசமாக ஊர்சுற்றுவதும் தனித்து நின்று உறவுகொள்வதும் மிகப்பெரிய நாகரீகம். நாளொருவண்ணம், பொழுதொரு மேனியாக ஆண், பெண் உறவு (காதலன், காதலி உறவு) மாறிக்கொண்டேயிருக்கும்.

தந்தை தினம் வருகிறது பல பேருக்கு அது வந்து போவதே தெரிவதில்லை. தாய் தினம் வருகிறது. கொஞ்சம் தொலைக்காட்சி மூலமாய் தெரிந்தாலும் "அம்மாவென்றழைக்காத உயிரில்லையே" என்பது போல் ஒரிரண்டு பாட்டுக்களுடன் முடிவடைகின்றது.

ஆனால் இந்தக் காதலர் தினம் மட்டும் ஒரு பத்து நாள்கள் முன்பாகவே சூடு பிடிக்கத் தொடங்கி ஒரு கலக்கல் கலக்கி விடுகிறது. அது ஏன்? ஏழு வயது சிறுவனும் கூட இதைப்பற்றித் தெரிந்து வைத்திருக்கிறான்.

அன்புடன் பரிசு கொடுப்பதில் தவறொன்றுமில்லை. ஆனாலும் ஒரு வரையறை மீற அங்கு அமிர்தமும் விஷமாகிவிடுகிறது.

நம் நாடு பெற்றோர்களைத் தெய்வமாக மதிக்கும் நாடு. தாய் தந்தையைப் பராமரித்து கடைசிவரை அவர்களைப் பாசத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டியது பிள்ளைகளின் கடமை. ஆகையால் தனியாகத் தாய், தந்தை தினம் தேவையே இல்லை. நம் மனத்தில் தினமும் அவர்கள் குடியிருக்கிறார்கள். மேல் நாட்டில் மகன், மகள் 16 வயது வந்தால் தனியாகக் குடிபோகிறார்கள். அவர்கள் சுதந்திரத்தில் ஒருவரும் தலையிடுவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆகையால் இந்தத் தந்தை தினம் தாய் தினம் என்று அவர்களுக்காக ஒரு நாள் ஒதுக்குகிறார்கள்.

இந்தக் காதலின் அர்த்தத்தை நம் நாட்டில் தவறாகப் புரிந்து கொண்டிருப்பார்களோ என்ற ஐயம் மனதில் உண்டாகிறது. இந்தப் புனிதக் காதல் பிறந்த கதையைப் பார்த்தால் ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்துக் கொள்ள முடியும்.

மூன்றாம் நூற்றாண்டில் கிளாடியஸ் என்ற கொடுமை அரசன் தன் சேனையில் நிறைய பேர்கள் சேர ஒரு சட்டம் கொண்டு வந்தான். அதாவது கல்யாணம் ஆகாதவர்கள்தான் சேனையில் சேர முடியும். அவரிடம் இருந்த Velaintine என்பவருக்கு இந்தச் சட்டம் பிடிக்கவில்லை. அவர் அரசனுக்குத் தெரியாமல் பல காதலர்களுக்குத் திருமணம் நடத்தித்தார். இது அரசனுக்குத் தெரிந்து, பின் அந்த நல்லவர் பிடிப்பட்டு மரண தண்டனையும் பெற்றார். எல்லோரும் கருணையுடனும் பாசத்துடனும் அவரை வந்து பார்த்தார்கள் ஜெயிலின் அதிகாரியின் சிறு மகள் அவர் மேல் மிகவும் அன்பு காட்டினாள். பெப்ரவரி 14 ஆம் திகதி அவருடைய கடைசி நாள் அன்று அந்தச் சிறு பெண்ணுக்கு ஒரு சின்னக் குறிப்பு எழுதி வைத்துவிட்டு மரணமடைந்தார்.

அந்த நாளில் இருந்து இந்தக் காதல் பறிமாற்றம். அவர் ஞாபகமாக நடக்கிறது. ஒரு பூக்களின் மூலமாகவோ, பொருள்களின் மூலமாகவோ இதை வெளிப்படுத்துகின்றனர்.

தொடர்ச்சி▼



# அன்பை கொண்டாடும் ஒரு தினம்...!

தொடர்ச்சி▲

உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரை பெண்ணின் கற்பைப் பற்றித் தான் இச்சமூகம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. கற்புக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் ஏதாவது செயற்பாடுகள், அல்லது பேச்சுக்கள் இருந்தால் அது பெண்ணின்




வாழ்க்கையே கேள்விக்குறியாக்கிவிடும்.

கற்பு என்பது புனிதமானது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. இருவரும் கற்பை பாதுகாக்க வேண்டும் என்று அனைத்து மதங்களும் கூறுகின்றன அந்த நாளில் காதலர்கள் மற்றும் தம்பதியர் வாழ்த்து அட்டை, சாக்லேட், பரிசு, முத்தம் என சகலத்தையும் பரிமாறிக்கொள்வது வாடிக்கை.

நம் எண்ணங்களையும், ஆசைகளையும், கனவுகளையும், தாபங்களையும், எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்துகொள்ள ஒரு காதலி அல்லது காதலன் கிடைத்துவிட்டால், வாழ்க்கை முழுமையாகிவிடும் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களுக்கே காதலின் சக்தி புரியும். ஒருவருக்கொருவர் உடமையாவதும், உரிமை கொண்டாடுவதும், ஆளுமை செலுத்துவதும் அல்ல. காதல் இரு உள்ளங்கள் சங்கமிக்கும் நிகழ்வு.

உண்மையில், காதலுக்காக சுயநலத்தையும், அகந்தையையும் இழப்பதில்தான் வாழ்க்கையின் இரகசியமே அடங்கியிருக்கிறது. காதலின் ஆச்சரியங்களில் ஒன்று சரணாகதி. எல்லாவற்றையும் காதலுக்கு அர்ப்பணிக்கும்போது காதலர்கள் புதுப்பிறவி எடுக்கிறார்கள். இதைப் புரிந்தவர்கள் புளகாங்கிதம் அடைகிறார்கள். தோற்றவர்கள் சபிக்கிறார்கள்.

ஒரு ஆணும், பெண்ணும் வாழ்க்கைப்பந்தம் ஏற்படுத்தி, ஒருவருக்கு ஒருவர் என வாழ, மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபட, அன்பின் அடிப்படையில் உருவான பந்தம் தான் காதல். ஆனால், இனக் கிளர்ச்சியை காதல் என உள்ளர்த்தம் செய்து கொண்டு இளைய சமுதாயம் பயணித்து வருகிறது. தமக்கு "பாய் பிரண்ட்"– "கேர்ள் பிரண்ட்" இல்லை என்றால், நண்பர்கள் மத்தியில் சமூக அங்கீகாரம் கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் காதல் உருவாகி வளர்ந்து வருகிறது. இது திருமணம்வரை செல்வதில்லை. ஆபத்தில்லாமல் இருக்கும்வரை இந்தக் காதலை கண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம். கதையில், கவிதையில், சினிமாவில் ரசிக்க மட்டுமே இவ்வகை காதல். இவை வாழ்வின் கனவுக் காட்சிகள். ஆனால், வாழ்க்கைக்கு உதவாது.

வாழ்க்கை என்பது ரியாலிட்டி. காதல் உணர்வை இயற்கை அளித்திருந்தாலும், அறிவைக் கொண்டு ஆராய்ந்து வாழ்க்கை முழுவதும் நிலையான இன்பம் துய்க்க ஏற்றவாறு முறைப்படுத்திக் கொள்வது அவசியம். ஆணோ, பெண்ணோ பொருளாதார சுதந்திரம் பெற்ற பின் காதலியுங்கள். அப்போது உங்களுக்கு ஓரளவு அனுபவம் ஏற்பட்டிருக்கும்.

திருமணம் ஒரு முடிவு அல்ல. ஆரம்பம் என்கிற நம்பிக்கை வந்தால் திருமணத்துக்குப் பிறகும் காதலை தொடர முடியும். திருமணத்துக்கு முந்தைய காதலும், பிந்தைய காதலும் ஒன்று என்கிற தவறான எண்ணம்தான் பிரச்சினைக்குக் காரணம். தற்போதுள்ள பணிச்சுமை, பொருளாதார நெருக்கடி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இல்லாமைதான் காதல் மணமுறிவுக்கு அடிப்படைக் காரணம். கணவன், மனைவியான பிறகு தங்களின் மன அழுத்தங்களையும் வெறுப்புகளையும் வெளியேற்றும் வடிகாலாக ஒருவரையொருவர் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இவ்வாறு செய்வது காதலுக்கு தரும் மரியாதை அல்ல. சுதந்திரமான ரொமான்டிக் காதல் வேறு இல்லறத்தில் புதுப்பிறவி எடுக்கும் காதல் வேறு என்பதைப் புரிந்து கொண்டாலே உங்கள் வாழ்க்கையில் குளிர்ச்சியான தென்றல் வீசும். நம் நாட்டுக் கலாசாரம். காதலைப் புனிதமாக மதிக்கிறது. இலை மறைவு தலை மறைவு என்பார்கள் ஆரோக்கியமாக உண்மையான அன்பை தன்னலமில்லாத அன்பைச் செலுத்தி கொண்டாட அதைவிடச் சிறந்தது வேறில்லை.

இறைவனும் அன்புக்கு அடிமை. எனவே எதிர்ப்பார்ப்பு இல்லாத அன்பை வாரி வாரி வழங்குவோம். உண்மைக் காதலுக்கு நாமும் காட்டுவோம்.பச்சைக் கொடி. அன்பை பரிமாறுவோருக்கு எமது காதலர் தின நல்வாழ்த்துகள்.



நடராஜன் ஹரன்



# ரி-20: ஓமானை மடக்கி வென்றது அயர்லாந்து

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இன்று கொழும்பில் நடந்த ஓமானுக்கு எதிரான போட்டியில் அயர்லாந்து அணி 96 ஓட்டங்களால் அபார வெற்றிப்பெற்றது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 235 ஓட்டங்களைச் சேர்த்தது.

அயர்லாந்து சார்பாக துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் டுக்கர் கடைசிவரை ஆட்டமிழக்காமல் 94 ஓட்டங்களையும், டெலானி 56 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

ஓமான் சார்பாக பந்து வீச்சில் அஹமட் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 236 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓமான் அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுளையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் கலீம் 50 ஓட்டங்களையும், மிசா 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் அயர்லாந்து அணி சார்பில் லிட்டி 3 விக்கெட்டுக்களையும், மத்தீவ் மற்றும் பெரிரி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ஸ்கொட்லாந்தின் டுக்கர் தெரிவானார்.





# பங்களாதேஷ் தேர்தலில் வெற்றி பெற்ற தாரிக் ரஹ்மானுக்கு மோடி வாழ்த்து!

பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தலில் தீர்க்கமான வெற்றியைப் பெற்றதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று பங்களாதேஷ் தேசியவாதக் கட்சித் தலைவர் தாரிக் ரஹ்மானுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

300 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி பெரும்பான்மையைப் பெறும் என்பது தெளிவாகத் தெரிந்தது.

இந்த நிலையில் பங்களாதேஷ் தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வ முடிவுகளை அறிவிப்பதற்கு முன்பு இந்தியப் பிரதமர் எக்ஸ் தளத்தில் இந்த வாழ்த்துச் செய்தியை பகிர்ந்து கொண்டார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் குறிப்பிடுகையில்,

"பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தலில் பங்களாதேஷ் தேசியக் கட்சியை தீர்க்கமான வெற்றிக்கு இட்டுச் சென்ற தாரிக் ரஹ்மானுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெற்றி, பங்களாதேஷ் மக்கள் உங்கள் தலைமையில் வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது.

ஜனநாயக, முற்போக்கான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பங்களாதேஷ்க்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்.

நமது பன்முக உறவுகளை வலுப்படுத்தவும், பொதுவான வளர்ச்சி இலக்குகளை முன்னேற்றவும் உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.





# பிரிட்டனை சேர்ந்த வீரர்களுக்கு இந்திய விமானப் படை பயிற்சி

வரலாற்றில் முதன்முறையாக இந்திய விமானப் படை அதிகாரிகள் பிரிட்டனில் உள்ள ராயல் ஏர் ஃபோர்ஸ் (ஆர்.ஏ.எஃப்) வேலி தளத்தில் அந்நாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவுள்ளனர்.

இதுகுறித்து பிரிட்டன் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்திய விமானப்படையைச் சேர்ந்த 3 தகுதிவாய்ந்த விமானப் பயிற்றுநர்கள் பிரிட்டனின் ஆர்.ஏ.எப் வேலி தளத்திற்கு அனுப்பப்பட உள்ளனர். இது பிரிட்டனின் அதிவேக ஜெட் விமானிகளுக்கான முதன்மைப் பயிற்சி தளமாகும். தொடக்கத்தில் இரண்டு ஆண்டு காலத்திற்கு இந்திய அதிகாரிகள் அங்கு பணியமர்த்தப்படுவார்கள்.

அவர்கள் “பி.ஏ.இ. ஹாக் டி2’ அல்லது ‘டெக்சன் டி1’ ரக விமானங்களில் பயிற்சி அளிப்பார்கள். இந்தப் பணியின் போது, இந்திய அதிகாரிகள் பிரிட்டன் தளபதிகளின் கீழ் பணியாற்றினாலும், அவர்கள் இந்திய விமானப்படையின் கட்டுப்பாட்டிலேயே இருப்பார்கள்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தல்:

# த.வெ.கவினர் விருப்ப மனு சமர்ப்பிக்க பெப்ரவரி 20 வரை கால அவகாசம்



சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட த.வெ.கவினர் விருப்ப மனுவை சமர்ப்பிக்கக் கால அவகாசம் பெப்பரவரி 20 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 234 தொகுதிகளிலும் வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் தங்களுக்கான விருப்ப மனுவைப் பெறுவதற்கும் அதனைச் சமர்ப்பிப்பதற்குமான கடைசித் திகதி இன்று என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கட்சியின் பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக, வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பெரும்பாலானோரால் விருப்ப மனுவைச் சமர்ப்பிக்க முடியாமல் போனதாகத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, விருப்ப மனுவைப் பூர்த்தி செய்து அளிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

அதன்படி, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கழகத் தோழர்கள் தங்களது விருப்ப மனுவைத் தலைமை நிலையச் செயலகத்தில் சமர்ப்பிக்கலாம். விருப்ப மனுக்களைச் சமர்ப்பிக்க அதுவே கடைசி நாள் ஆகும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஈரானில் ஆட்சி மாற்றம் தேவை டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்

ஈரானின் தற்போதைய ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படுவது நடக்கக்கூடிய மிகச்சிறந்த விடயம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானின் தற்போதைய அரசியல் சூழல் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



இருப்பினும், ஈரானை வழிநடத்துவதற்கு தான் விரும்பும் நபர் யார் என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்த அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், அந்நாட்டின் ஆட்சியைப் பொறுப்பேற்கக் கூடிய தகுதியான ஒரு குழுவினர் இருக்கின்றார்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எப்ஸ்டீன் வழக்கில் சிக்கினார் ஆண்ட்ரூ அரச தரவுகளை கசியவிட்டமை அம்பலம்



எப்ஸ்டீன் வழக்கில் சிக்கி கடும் நெருக்கடியை எதிர்கொள்ளும் ஆண்ட்ரூ தனது வங்கியாளர் நண்பருக்கு கருவூல இரகசிய தரவுகளை கசியவிட்டமை தற்போது அம்பலமாகியுள்ளது.

முன்னாள் இளவரசரான ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் - வின்ட்சர் பிரித்தானியாவின் வர்த்தகத் தூதராக செயல்பட்டு வந்த நிலையில், 2010 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தை நெருக்கிய நிதி நெருக்கடி குறித்த உத்தியோகப்பூர்வ தகவல்களை ஒருமுறை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

ஆண்ட்ரூவின் கோரிக்கையை ஏற்று இரகசிய தரவுகளை கருவூலத்துறை கைமாறியுள்ளது. ஆனால், அந்தத் தரவுகளை அவர் தனது நண்பரும் வங்கியாளருமான ஜொனாதன் ரோலாண்ட் என்பவருக்கு கசியவிட்டுள்ளார்.

ஏற்கனவே, பிரித்தானிய அரசாங்கத்தின் மிக ரகசியமான தரவுகளை எப்ஸ்டீனுக்கு ஆண்ட்ரூ கசியவிட்டார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், அடுத்த பேரிடியாக ஜோனாதன் ரோலண்ட் விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ளது.

தற்போது தேம்ஸ் வேலே பொலிஸ் அதிகாரிகள் இந்த வழக்கை விசாரிப்பது தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுத்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை 2008 வங்கி நெருக்கடியில் பிரித்தானியர்கள் வைப்புத்தொகை இழந்தமை தொடர்பாக இங்கிலாந்து மற்றும் ஐஸ்லாந்து இடையே இராஜதந்திர மோதல் ஏற்பட்டிருந்தது.

அதுமட்டுமின்றி ஜோனாதன் ரோலண்ட் என்பவருக்கு கருவூல இரகசியத்தை ஆண்ட்ரூ கசியவிடுவதற்கு ஒரு வருடம் முன்பு தோல்வியுற்ற ஐஸ்லாந்து கடன் வழங்குநரிடமிருந்து Banque Havilland வங்கி சொத்துக்களை வாங்கியிருந்தது.

ஆண்ட்ரூ கசியவிட்ட தரவுகளால் ஜோனாதன் ரோலண்ட் தமக்கு சாதகமான முடிவுகளை எடுக்க வாய்ப்பாக அமைந்தது என்றும் கூறப்படுகிறது.

அதாவது, ஐஸ்லாந்தின் அரசு சட்டத்தரணிகள் அலுவலகம், Kaupthing வங்கியின் அலுவலகங்களை சோதனை செய்த சில நாள்களுக்குப் பிறகு ஆண்ட்ரூ இந்த மின்னஞ்சலை அனுப்பியுள்ளார்.

இதன் காரணமாகவே, பிரித்தானியர்கள் பலர் தங்கள் பணத்தை இழந்தனர்.

இதனிடையே, 2017 இல் வாங்கியிருந்த 1.5 மில்லியன் பவுண்டுகள் கடனை ஜோனாதனின் தந்தை டேவிட் ரோலண்ட் ரத்து செய்துள்ளார் என்பதும் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்:

# ஆணுறை தீர்ந்தமையால் நெருக்கடியில் வீரர்கள்

இத்தாலியில் நடைபெற்று வரும் 2026 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கி சில நாட்களிலேயே, வீரர்களின் குடியிருப்பில் வழங்கப்பட்ட இலவச ஆணுறைகள் தீர்ந்துபோனதால் எதிர்பாராத நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

போட்டிகள் ஆரம்பமான மூன்று நாள்களிலேயே ஏற்பாட்டாளர்களால் வழங்கப்பட்ட 10,000 பொதிகள் முழுமையாகத் தீர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தமக்குத் தேவையான விநியோகம் இல்லை என வீரர்கள் முறைப்பாடு அளிக்கத் தொடங்கியுள்ளனர்.




"மூன்றே நாள்களில் இருப்பு முடிந்துவிட்டது. மேலதிக கையிருப்புகள் வரும் என உறுதியளித்துள்ளனர், ஆனால் அது எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது." என பெயர் குறிப்பிட விரும்பாத வீரர் ஒருவர் இத்தாலிய ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த பரிஸ் ஒலிம்பிக் போட்டிகளின் போது ஒரு வீரருக்கு ஒரு நாளைக்கு இரண்டு வீதம் மொத்தம் 300,000 ஆணுறைகள் வழங்கப்பட்டன.

ஆனால், இந்த குளிர்கால ஒலிம்பிக்கில் 10,000 இற்கும் குறைவான எண்ணிக்கையே ஒதுக்கப்பட்டிருந்தது.

இவ்வளவு அதிகப்படியான தேவை ஏற்படும் என்பதை முன்கூட்டியே கணிக்கத் தவறிய ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழு, தற்போது மேலதிக விநியோகத்தைப் பெற்றுக்கொடுக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

சனிக்கிழமை 14/02/2026

**எப்ஸ்டீன் விவகாரத்தில் சிக்கினார் கனடாவைச் சேர்ந்த பேராசிரியர்**



C2▶






# கனடாவை உலுக்கிய துப்பாக்கிச்சூட்டு சம்பவம்; கொலையாளி திருநங்கையென்று அடையாளம்

கனடாவின்பிரிட்டிஷ்கொலம்பியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒரு திருநங்கை என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கனடாவின்பிரிட்டிஷ்கொலம்பியா மாகாணத்தில் உள்ள மலைப்பகுதியான டம்பளர் ரிட்ஜ் நகரில் கடந்த கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில், ஒரு ஆசிரியர் மற்றும் ஐந்து மாணவர்கள் உட்பட மொத்தம் 9 பேர் உயிரிழந்த சம்பவம் முழு நாட்டையுமே உலுக்கியுள்ளது.

C2▶

# கனடாவில் சிறையிலிருந்து தப்பிய கைதி தொடர்பில் கடும் எச்சரிக்கை

கனடாவின் நியூ பிரான்ஸ்விக் மாநிலத்தில் உள்ள சிறையொன்றிலிருந்து ஒரு கைதி தப்பிச் சென்றுள்ளார்.

இந்தக் கைதி ஓர் ஆபத்தானவர் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

35 வயதான டாட் ஜான் லூயிஸ், கடந்த வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் சிறை வளையத்தைத் தாண்டி ஓடிவிட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்த நபர் ஆயுத குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி கைதி மொன்ட்கோன் பகுதியில் இருக்கக்கூடும் என் பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

கைதி ஆபத்தானவர் எனவும் அவரை அணுக வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# எப்ஸ்டீன் விவகாரத்தில் சிக்கினார் கனடாவைச் சேர்ந்த பேராசிரியர்



அமெரிக்க பாலியல் குற்றவாளி ஜிப்ரி எப்ஸ்டீன் தொடர்பான புதிய ஆவணங்கள் வெளியானதைத் தொடர்ந்து, கனடாவில் பணியாற்றியுள்ள புகழ்பெற்ற கோட்பாட்டு இயற்பியலாளர் லீ ஸ்மோலின் தனது பணிப் பொறுப்பில் இருந்து தற்காலிகமாக விலகும் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ஒன்டாரியோ மாகாணத்தின் வாட்டர்லூவில் செயல்படும் உலகப் புகழ்பெற்ற இயற்பியல் கோட்பாட்டு பல்கலைக் கழகமான பிரிமீட்டரின், நிறுவனர் பேராசிரியர்களில் ஒருவராக இருந்த ஸ்மோலின், தற்காலிகமாக தனது பணிச்சார்பு உறவை இடைநிறுத்த ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த விடயத்தை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மார்செலா கரினால மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நீதித்துறை துறை வெளியிட்ட கோடிக்கணக்கான புதிய ஆவணங்களில் ஸ்மோலின் மற்றும் எப்ஸ்டீன் இடையேயான மின்னஞ்சல் தொடர்புகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்மோலின் எந்தவித சட்டவிரோத செயலிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

எனினும், எப்ஸ்டீன் 2008ஆம் ஆண்டு சிறாரிடம் விபச்சார கோரிக்கை வைத்த குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக் கொண்ட பின்னரும், அவர்களுக் கிடையேயான தொடர்பு தொடர்ந்ததாக பதிவுகள் காட்டுகின்றன.

2009 முதல் 2013 வரை இருவரும் மின்னஞ்சல், தொலைபேசி உரையாடல் மற்றும் சந்திப்புக்களை தொடர்ந்தனர் என ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

சில மின்னஞ்சல்களில் ஸ்மோலின், எப்ஸ்டீனை நண்பர் என குறிப்பிட்டுள்ளார். முன்னதாக, 2008 இற்குப் பிறகு எப்ஸ்டீனுடன் தொடர்பில்லை என ஸ்மோலின் பல்வேறு ஊடகங்களுக்கு கூறியிருந்தார்.

ஆனால் தற்போது வெளியான ஆவணங்கள் அந்தக் கூறுகைகளுடன் முரண்படுகின்றன என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

## கனடாவை உலுக்கிய...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் துயரச் சம்பவத்தைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவு தெரிவிக்கப் பிரதமர் மார்க் கார்னி விரைவில் அங்கு நேரில் செல்லவுள்ளார். இந்நிலையில் கொலையாளி தொடர்பில் பகீர் தகவல்கள் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

போலீஸ் தகவல்களின்படி, 18 வயதான ஜெஸ்ஸி வான் ரூட்செலர் என்ற இளம்பெண், முதலில் தனது வீட்டிலேயே தனது தாய் மற்றும் வளர்ப்புச் சகோதரரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார் .

அதன் பிறகு உள்ளூர் பள்ளிக்குச் சென்று அங்கிருந்த ஒரு ஆசிரியர் மற்றும் ஐந்து இளம் மாணவர்களைச் சுட்டுக் கொன்ற அவர், இறுதியில் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

ஜெஸ்ஸி கடந்த ஆறு ஆண்டுகளாகத் திருநங்கையாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் என்பதும், அவர் கடுமையான மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தவர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜெஸ்ஸியின் மனநலப் பாதிப்புகள் குறித்து ஏற்கனவே பொலிஸாருக்குப் புகார்கள் வந்துள்ளன. பொலிஸார் அவரது வீட்டிற்குச் சென்று இரண்டு முறை அவரைப் பரிசோதனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

ஒரு கட்டத்தில் அவரது வீட்டிலிருந்த துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்ட போதிலும், அதன் உரிமையாளர் மேல்முறையீடு செய்ததால் அந்தத் துப்பாக்கிகள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன.

இந்த முடிவே இப்போது இவ்வளவு பெரிய உயிர்ச்சேதத்திற்குக் காரணமாகிவிட்டதாகப் பொதுமக்களிடையே கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தத் துயரச் சம்பவத்தை ஒட்டி, கனடா முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் தேசியக் கொடி ஏழு நாள்களுக்கு அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் எனப் பிரதமர் அறிவித்துள்ளார்.

அதேவேளை டொராண்டோவில் உள்ள புகழ்பெற்ற சிஎன் டவர் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக விளக்குகள் அணைக்கப்பட்டு மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது.

மேலும் சுமார் 2,400 மக்கள் மட்டுமே வசிக்கும் அந்தச் சிறிய மலைக் கிராமத்தில், உயிரிழந்த குழந்தைகளுக்காகப் பொதுமக்கள் பொம்மைகள் மற்றும் மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



# விளையாட்டுப் பொருள்களை திருடிய நபர்கள் மீது வழக்கு

கனடாவின் தென்மேற்கு ஒன்டாரியோ பகுதியில் உள்ள கடைகளில் இருந்து நூற்றுக்கணக்கான ஜெலிகெட் மென்மையான பொம்மைகள் திருடப்பட்ட சம்பவத்தில் இருவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில் ஒன்டாரியோ மாநிலத்தின் குயெல்ஃப் நகரத்தைச் சேர்ந்த 52 வயதான பெண் ஒருவர் 2025 டிசம்பரில் கைது செய்யப்பட்டார்.

அப்போது அதிகாரிகள் அவரது இல்லத்தில் இருந்து 140 ஜெலிகெட் பொம்மைகளை மீட்டனர்.

அவற்றின் மொத்த மதிப்பு சுமார் 7,500 கனேடிய டொலர்கள் என மதிப்பிடப்பட்டது.

பெப்ரவரி 13ஆம் திகதி வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், விசாரணையில் புதிய தகவல்கள் வெளிப்பட்டன. ஏப்ரல் முதல் டிசம்பர் 2025 வரை, பெண் ஒருவர் ஆண் ஒருவருடன் இணைந்து சுமார் 300 ஜெலிகெட் பொம்மைகளை திருடியுள்ளார். இதன் மொத்த மதிப்பு 15,000 கனேடிய டொலர்களுக்கு மேல் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவங்கள் வாட்டர்லூ பிராந்தியம், குயெல்ஃப், பர்லிங்டன், மில்டன், ஜார்ஜ்டவுன், ஓக்வில்லே மற்றும் ஓரன்ஜ்வில்லே உள்ளிட்ட 17 வணிக நிறுவனங்களில் இடம்பெற்றதாகவும், மொத்தம் 34 திருட்டுகள் இந்த இருவருடன் தொடர்புடையதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், திருடப்பட்ட பொம்மைகள் பெயர் குறிப்பிடப்படாத ஒன்லைன் தளத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கனடாவிலுள்ள ஹமில்டன் நகரில் வாகனம் திருடிய சிறுவர்கள் கைது




கனடாவின் ஹமில்டன் நகரில் திருடப்பட்ட வாகனம் ஒன்றை அதிவேகமாகவும் ஆபத்தான முறையிலும் செலுத்திய சம்பவத்தில் 12 வயது சிறுவன் உட்பட மூன்று சிறுவர்கள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நகரின் கிழக்குப் பகுதியில் முகமூடி அணிந்த மூவர் இருந்த சந்தேகத்திற்கிடமான வாகனம் குறித்து பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததாக ஹாமில்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரிகள், அந்த வாகனம் முன்பே திருடப்பட்டதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தினர்.

பின்னர் அந்த வாகனம் ஆபத்தான முறையில் ஓட்டப்பட்டு வருவதை பொலிஸார் கண்காணித்தனர்.

பொது மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, குறுகிய நேரத்திலேயே பொலிஸார் வாகனத்தை பின்தொடர்வதை நிறுத்தினர் என கூறப்பட்டுள்ளது. சிறிது நேரத்தில், அந்த வாகனம் ஓட்டுனர் யாரும் இல்லாமல் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்கள் ஒரு கடையில் இருந்தமை கண்டறியப்பட்டது. பொலிஸார் கடைக்குள் நுழைந்து மூவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நேரத்தில், மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடத் தயாராக இருந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஒருவரிடம் திருடப்பட்ட வாகனத்துக்குச் சொந்தமான கீ-ஃபாப் கைப்பற்றப்பட்டது.

மேலும், மற்றொரு இளைஞர் மீது வாகனப் பயன்படுத்துதல் மற்றும் குறிப்பிட்ட நபர்களுடன் தொடர்பு கொள்ளுதல் தொடர்பான நீதிமன்ற விதிமுறைகள் அமலில் இருந்ததாகவும், அவருக்கு எதிராக நிலுவையில் இருந்த பிடியாணை இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச்சாட்டுக்குள்ளானவர்கள் 15, 13 மற்றும் 12 வயதுடைய சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர்களின் அடையாளம் வெளியிடப்படவில்லை. இந்தச் சம்பவம் நகரில் இளைஞர் குற்றச்செயல்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதை பிரதிபலிப்பதுடன், திருடப்பட்ட வாகனங்களுடன் தொடர்புடைய பொதுப் பாதுகாப்பு ஆபத்துகளையும் வெளிப்படுத்துகிறது என பொலிஸார் தெரிவித்தனர்.